# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.25 (L.W.49)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Saravanakumar | Caste | : BC |
| Father's Name | : D.Sankaralingam | Calling | : Doctor |
| Village | : Gudiyattam | Religion | : Hindu |
| Taluk | : Gudiyattam | Age | : 40 yrs |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.01.2025.

(A1 to A5 present. A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.05 P.M.**

நான் தற்போது உதவி பேராசிரியராக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். 19.06.2015 ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக இருந்தபோது மாலை 04.30 மணிக்கு ஷமில் அகமது என்பவரை சிகிச்சைக்காக அவருடைய உறவினர் அழைத்து வந்தார் உறவினரின் பெயர் எனக்கு தற்போது ஞாபகமில்லை.

அப்போது அவரை பள்ளிக்கொண்டா ஆய்வாளர் தெரிந்த நபர் அடித்துவிட்டார்கள் என்று சொன்னார். அதற்காக அவரை உடல் ஆய்விற்கு உட்படுத்தியபோது அவரது வலது கை முழங்கையில் இரத்தம் கட்டியிருந்தது. மேலும் அதே இடத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் வலது தோல்பட்டையில் இரத்தம் கட்டியிருந்தது. வேறு காயங்கள் இல்லை.

சட்டைகளை கழட்டி பார்த்தேன். காயங்கள் எதுவும் இல்லை. அவரை உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தோம். அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.47. பின்னர் நான் இரண்டு நாட்கள் விடுமுறையில் சென்றேன். மற்ற மருத்துவர்கள் அவருக்கு தொடர் சிகிச்சை அளித்தார்கள்.

22.06.2015 அன்று நான் பணிக்கு திரும்பி வார்டு ரவுண்டு சென்றபோது நோயாளியை விசாரித்தபோது இரண்டு கைகளையும் தூக்குவதற்கு கடினமாக உள்ளது என்று சொன்னார். அதை அவருடைய மருத்துவ பரிசோதனை பதிவேட்டில் பதிந்தேன். அவருக்கு வலது கையில் எக்ஸ்ரே எடுத்தோம் அதில் எந்தவித எலும்பு முறிவும் காணப்படவில்லை.

22.06.2015 மாலை MRI Scan எடுப்பதற்காக வேலூரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அவரை ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தோம். அவருக்கு கைக்கு வரும் நரம்பு பகுதி அடிப்பட்டிருக்கலாம் என்ற மருத்துவ சந்தேகத்தின் அடிப்படையில் அதை நிவர்த்தி செய்ய MRI Scan எடுத்து பிளாஸ்டிக் சர்ஜரி கருத்துரு பெறலாம் என்பதற்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவருடைய மருத்துவ வரலாற்று குறிப்பு அடங்கிய 3 தாள்கள், 5 பக்கங்கள் அ.சா.ஆ.48. அந்த குறிப்பில் 22.06.2015 நான் பதிந்துள்ளேன்.

எனக்கு முன்பு இரண்டு நாட்களில் அதே மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் ஸ்ரீநாத், மருத்துவர் அறிவுமணி ஆகியோர்கள்

அந்த நோயாளியை பார்த்திருக்கலாம் மற்றும் அப்போது இருந்த முதன்மை மருத்துவர் நோயாளியை பார்த்திருக்கிறார் அதற்காக ஆதாரம் அந்த கோப்பில் உள்ளன. நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார். அவரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன். தற்போது நீதிமன்றத்தில் சொன்னதை நீதிபதியிடம் சொன்னேன். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.47 ல் உறவினர்கள் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அட்மிஷன் நான்தான் போட்டேன். அந்த நோயாளி என்ன சொன்னாரோ அதைத்தான் நான் பதிவேட்டில் பதிவு செய்தேன்.

அ.சா.ஆ.47 ல் தெரிந்தவர்கள் அடித்தார்கள் என்று பதிவு செய்துள்ளேன். அவர் பெயரை கேட்டு பதிவு செய்யவில்லை. அ.சா.ஆ.47 பதிவு செய்த பிறகு அருகாமையில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன். போலீஸ் யாரும் அன்றைய தேதியில் வரவில்லை. அட்மிஷன் Accident and Emergency ward ல் போட்டேன்.

19.06.2015 ல் இருந்து எந்த மணி வரை நான் பணியில் இருந்தேன் என்றால் மறுநாள் காலை 07.30 மணிவரை பணியில் இருந்தேன். நான் விடுப்பு கேட்டு விண்ணப்பித்து சென்றேனா

என்றால் இல்லை. 24 மணி நேரம் தொடர்ந்து பணியாற்றினால் அடுத்த 24 மணிநேரம் பணிக்கு வரவேண்டாம். அதன் அடிப்படையில் நான் 21.06.2015 அன்று வாராந்திர விடுப்பு என்பதால் பணிக்கு வரவில்லை.

22.06.2015 அன்று பணிக்கு வந்தேன். 20.06.2015 அன்று காலை 07.30 மணிவரை Accident and Emergency ward–க்கு டியூட்டி டாக்டர் ஆன நான்தான் பொறுப்பு வகித்தேன். 20.06.2015 அன்று காலை 07.30 மணிக்கு பிறகு யார் அந்த வார்டில் டியூட்டி டாக்டர் என்றால் தற்போது நினைவில்லை.

என்னுடைய பணி நேரம் முடிந்த பின்பு என்னுடைய டியூட்டியை அடுத்த மருத்துவரிடம் ஒப்படைத்துவிட்டு செல்ல வேண்டும் அவர் யார் என்றால் மருத்துவமனை வருகை பதிவேட்டை பார்த்தால் சொல்வேன். இத்தருணத்தில் எதிரிகளின் தரப்பில் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தரப்பட்ட ஆம்பூர் அரசு மருத்துவமனையின் ஜூன் 2015 ம் ஆண்டிற்கான பொது தகவல் அதிகாரியால் சான்றிடப்பட்ட நகலை சாட்சியிடம் காட்டி வினவியபோது சாட்சி அதை பார்த்து 20.06.2015 அன்ற சாட்சி பணி முடித்து செல்வதற்கு முன்னர் டாக்டர் ஸ்ரீநாத் இடம் Accident and Emergency ward டியூட்டியை ஒப்படைத்தாக கூறுகிறார்.

20.06.2015 அன்று காலை 07.30 மணிக்கு மேல் Accident and Emergency ward–க்கு டாக்டர் ஸ்ரீநாத் தான் பொறுப்பாளர் என்றால் இல்லை. அன்று Accident and Emergency ward–க்கு யார் பொறுப்பு டாக்டர் என்றால் தற்போது நினைவில்லை. காலை 08.00 மணிமுதல் மதியம் 02.00 மணிவரை ஆண் வார்டுக்கு ஒரு டாக்டரும், பெண்

வார்ட்டுக்கு ஒரு டாக்டரும் Accident and Emergency wardகு ஒரு டாக்டரும் என சுழற்சி முறையில் மருத்துவர்கள் போடுவார்கள். யாராவது விடுப்பு எடுத்தால் மாற்றியும் பார்த்துக்கொள்வோம்.

அந்த Accident and Emergency ward–ல் Chief Medical Officer (CMO) rounds போகும்போது எந்த டாக்டர் அவருடன் செல்வார்கள் என்றால் சில நேரங்களில் CMO தனியாக செல்வார். அ.சா.ஆ.48–ல் பின்பக்கத்தில் என்னுடைய கையெழுத்திற்கு கீழே 2025 என்று வருடத்தை போட்டுவிட்டு அதை 2015 என திருத்தம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான் அந்த திருத்தத்திற்கான சுருக்கம் எதையும் நான் போடவில்லை. அதனால் சிபிசிஐடி போலிசார் பின்னர் என்னை அழைத்து கையெழுத்தை வாங்கினார்கள் என்றாலும் அந்த ஆவணத்தை என்னிடம் காட்டவில்லை.

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி signature of medical officer என்று படிவத்தில் உள்ள நிலையில் அதற்கு மேல் கையெழுத்து போடவேண்டும் ஆனால் அ.சா.ஆ.48 ல் இரண்டாவது பக்கத்தில் signature of medical officer என்று அச்சிடப்பட்ட இடத்திற்கு கீழே நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவ குறிப்புகளை எழுதிய பின்னர் அதில் இடம் இல்லாததால் கீழே கையொப்பம் போட்டேன்.

அந்த படிவத்தில் மருத்துவ அதிகாரியின் பெயரை capital letter ல் எழுதி தேதி குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் அந்த அ.சா.ஆ.48 ல் என்னுடைய பெயரை capital letter ல் எழுதவில்லை காரணம் அன்று புறநோயாளிகள் பிரிவில் பணிச்சுமை அதிகமாக

இருந்ததால் எழுதவில்லை. அ.சா.ஆ.48 பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் என்னுடைய மருத்துவமனையில் முத்திரை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அந்த படிவத்தின் வரிசை எண் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

அந்த நோயாளியின் Case History Sheet–ல் வரிசை எண் இல்லை. அந்த ஆவணத்தில் முதல் பக்கத்தில் பச்சை மையில் போடப்பட்டிருப்பது என்னுடைய கையெழுத்தின் சுருக்கமாகும் அதற்கு பக்கத்தில் போடப்பட்டுள்ள கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியாது. அந்த முதல் பக்கத்தில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் நான் நோயாளியை டிஸ்சார்ஜ் செய்யும்போது போட்டது. இரண்டாவது தாள் முடிந்து மூன்றாவது தாள் தொடங்கும்போது பக்க எண் போட்டுவிட்டுதான் தொடங்குவோம் என்றால் சரிதான். அந்த மூன்றாவது பக்கத்தில் பக்க எண்,3 போட்டு ஆரம்பித்துள்ளதா என்றால் இல்லை.

20.06.2015 அன்று காலை 11.00 மணிக்கு நோயாளியின் மருத்துவ சிகிச்சை பொறுத்து எழுதப்பட்ட வாசகங்கள் "During rounds patient not found in ward". அந்த பக்கத்தில் 11.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளதை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த "During rounds patient not found in ward" என்று எழுதப்பட்டிருப்பதற்கு கீழே கையொப்பம் இட்டிருப்பவர் டாக்டர் கென்னடி, டாக்டர் கென்னடி எழுதும்போது 11.00 மணி என்று எழுதவில்லை.

பின்னர் வழக்குக்கு வேண்டி 11.00 மணி என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. அதே தேதியில் மூன்றாவது பக்கத்தில் 20.06.2015 என்று தேதியிட்டு "Patient was in male ward during morning rounds to cancel Absconding" என்று டாக்டர் ஸ்ரீநாத் எழுதியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த பக்கத்தில் இரத்த அழுத்தம் குறித்து பின்னிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது டாக்டர் ஸ்ரீநாத் பதிவு செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

20.06.2015 தேதியிட்ட பகுதியில் Duty MO என்று எழுதியதை டாக்டர் ஸ்ரீநாத் எழுதவில்லை என்றும் வழக்கிற்காக பின்னிட்டு எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் டாக்டர் ஸ்ரீநாதின் கையெழுத்தை கொண்டு என்னால் சரியாக கூறமுடியவில்லை. அதில் 08.00 P.M. என்று போடப்பட்டு பின்பு 04.00 P.M. என்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது எதை எழுதி திருத்தம் செய்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. அதை யார் திருத்தம் செய்தார்கள் என்றால் தெரியாது.

20.06.2015 அன்று 02.00 மணிக்கு பிறகு டாக்டர் ஸ்ரீநாத்தான் Accident and Emergency ward க்கு இன்சார்ஜ் என்றால் சரிதான். மருத்துவர் நோயாளியை வார்ட்டில் 04.00 மணிக்கு பார்க்கும்போது அவருக்கு மருந்து மாத்திரைகள் எழுதுவார்களா என்றால் எழுதுவார்கள். நோயாளிக்கு நான் மாலை 04.00 மணிக்கு மருந்து மாத்திரைகள் எழுதியதாக அந்த ஆவணத்தில் எழுதியிருப்பதாக அந்த ஆவணத்தில் எழுதி ஜோடிக்கப்பட்டது என்றால் அந்த நோயாளி 04.00

மணிக்கு மருத்துவமனையில் இருந்ததாக கூறவே அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

21.06.2015 யார் பணி மருத்துவர் என்றால் தெரியவில்லை. 4 வது பக்கத்தில் 21.06.2015 ல் "Inability to lift" என்ற வாசகங்கள் வேறு ஒருவரால் வேறு ஒரு பேனாவை கொண்டு பின்னிட்டு வழக்கிற்காக எழுதப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

21.06.2015 ல் எழுதியிருப்பது வழக்கிற்காக பின்னிட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 21.06.2015 ல் மருத்துவர் யாரும் ஆவணத்தில் அ.சா.ஆ.48 ல் கையெழுத்து போடவில்லை என்றால் அதை எந்த மருத்துவர் எழுதினார் அவருடைய கையொப்பம் இருக்கிறதா என்றால் இல்லை.

அ.சா.ஆ.48 ல் 5 வது பக்கத்தில் 22.06.2015 தேதியிட்டு பச்சை மையில் எழுதப்பட்ட வாசகங்கள் என்னால் எழுதப்பட்டவைகள். 22.06.2015 அன்று பச்சை மையில் நான் எழுதிவிட்டு அதற்கு பிறகு நீல மையின் மூலம் குறிப்புகள் எழுதியிருக்கிறேன் என்றால் சரிதான். அதே பக்கத்தில் நீல மையில் எழுதியுள்ள வாசகங்கள் பின்னிட்டு வழக்கிற்காக எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. அதே பக்கத்தில் நீல மையால் எழுதப்பட்ட வாசகங்கள் 22.07.2015 அன்றுதான் எழுதியுள்ளேன் என்றால் பின்னிட்டு 22.06.2015 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் வேகமாக எழுதும்போது கை தவறி எழுதிவிட்டேன்.

நான் போட்ட அந்த தேதியில் திருத்தம் உள்ளதா என்றால் இல்லை. திருத்தம் உள்ளது என்றாலும் திருத்தம் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.48 ல் 5 வது பக்கத்தில் நோயாளி வார்டில் இருந்தாரா என்ற குறிப்பு எழுதவில்லை என்றால் சரிதான். நீதிமன்றதில் இருக்கும் பட்டியல் ஆவணம் எண் 51 பக்கம் 9 ல் வெள்ளை தாளில் மேலிருந்து கீழாக எந்த தகவலும் எழுதாமல் 22.06.2015 என்று தேதியிட்டு Reference Slip என்று எழுதி பெற்றுக்கொண்டேன் என்று தமிழில் எழுதி N.K.Md. Ghouse என்று எழுதப்பட்டுள்ளது அதை investigation என்ற படிவத்தோடு இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த வெள்ளை தாளில் ஏன் அவ்வாறு கையெழுத்து வாங்கப்பட்டிருக்கிறது என்றால் அங்கு இருக்கும் செவிலியர் அவ்வாறு எழுதி கையெழுத்து வாங்குவது நடைமுறை. அப்படியானால் இதற்கு முன்பாக அவ்வாறு பல தாள்கள் உள்ளன என்றால் சரியல்ல.

நான் எழுதியிருக்கும் பக்கத்திற்கு பின்பாக ஒரு பக்கம் காலியாக விட்டு கையெழுத்து வாங்கியிருப்பது அதில் எதை வேண்டுமானாலும் பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கில் வாங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.

அ.சா.ஆ.48 ல் பக்கம் 5 ல் நாங்கள் நீல மையில் எழுதியிருப்பதற்கு கீழே கையெழுத்து வாங்கியிருக்கலாம் அவ்வாறு இல்லாமல் ஒரு தனி தாளில் அந்த தாளினுடைய கீழே கடைசியில் கையெழுத்து வாங்கியிருப்பது வழக்கிற்காக எதை வேண்டுமானாலும்

எழுதி பூர்த்தி செய்துக்கொள்ளலாம் என்ற உள்நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை.

பட்டியல் ஆவண எண் 51 ல் பக்கம் 11 என்று எழுதியிருக்கிற பக்கத்தில் Nurse report chart என்ற ஆவணத்தில் எத்தனை விதமான கையெழுத்து உள்ளது என்றால் பல்வேறு நபர்களின் கையெழுத்து (Multiple Hand Writing) இருக்கிறது என்று சொன்னால் சரிதான். Shift மாறுதல் ஆகி வருவார்கள். 1

9.06.2015 தேதியிட்ட காலத்தில் Staff Nurse நிலா என்று இருக்கிறதே என்று சொன்னால் சரிதான். 20.06.2015 என்று குறிப்பிட்ட தேதியில் எழுதப்பட்டுள்ள தகவல்கள் நான்கு வகையான (Multiple Hand Writing) கையெழுத்தில் வித்தியாசமானதாக உள்ளது என்றால் சரிதான்.

20.06.2015 என்ற எழுதப்பட்டிருக்கிற (Multiple Hand Writing)ல் ஒரு இடத்தில் மூன்றாவது column ல் (07.00 P.M. to 07.00 A.M.) நிலா என்றும் 2 ம் column ல் (01.00 P.M. to 07.00 P.M.) என்பதில் Staff Nurse புனிதா என்றும், முதல் column ல் (07.00 A.M. to 01.00 P.M.) இருவிதமான Multiple Hand Writing ல் யார் எழுதியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

பட்டியல் ஆவண எண் 51 ல், 11 வது பக்கத்தில் இரண்டு மற்றும் மூன்றாவது column–களில் எவ்வித குறிப்புகளும் எழுதப்படவில்லை ஆனால் வழக்கிற்காக இரண்டு மற்றும் மூன்றாம் column–களில் வழக்கிற்கு தேவையான வாசகங்களை எழுதி ஒரு பொய்யான ஆவணத்தை தயாரித்துள்ளேன் என்றால் இல்லை.

அதேபோல முதல் column ல் இருவேறு எழுத்து வடிவங்களில் எழுதப்பட்டுள்ள தகவல்களும் பின்னிட்ட காலத்தில் வழக்கிற்காக எழுதப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த பட்டியல் ஆவணம் 51 ல் 11 வது பக்கம் என்பது முற்றிலுமாக புதிதாக எழுதி இந்த வழக்கிற்காக சேர்க்கப்பட்ட ஒரு பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல.

பட்டியல் ஆவணம் 51 ல் 12 வது பக்கத்தில் 20.06.2015 ல் ஏதாவது மருந்து கொடுத்துள்ளார்களா என்றால் காலை 07.00 முதல் மதியம் 01.00 மணி உள்ள வேளையில் மருந்து கொடுத்துள்ளார்கள். மதியம் 01.00 மணி முதல் மறுநாள் காலை 07.00 மணி வரை எந்த மருந்தும் கொடுத்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

20.06.2015 என்ற தேதியிட்ட Drug chart ல் மதியம் 01.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை, 07.00 மணி முதல் மறுநாள் 07.00 மணிவரை என்று குறிப்பிட்டப்பட்டுள்ள இடத்தில் எந்த மருந்தும் நோயாளிக்கு கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லை அதற்கு நேராக எந்த Staff Nurse ம் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். அதே பக்கத்தில் டாக்டர் கையெழுத்து மற்றும் முத்திரை இல்லை என்றால் சரிதான்.

(மாலை 04.40 மணிக்கு சிறிய இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை துவங்கிய நேரம் மாலை 04.55**

ஒரு செவிலியர் ஒரு டியூட்டி பார்த்துவிட்டு வீட்டிற்கு செல்லும்போது நோயாளிகளின் எண்ணிக்கை குறித்து பதிவாக எழுதி மற்றொரு செவிலியரிடம் கொடுத்துவிட்டு செல்வார் என்பது நடைமுறை.

20.06.2015–ல் 11.00 மணிக்கு போலீசாரிடம் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்று மருத்துவ குறிப்பில் உள்ளது என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ பெறப்பட்ட ஆவணத்தை சாட்சியிடம் காட்டி வினவியபோது அதை சாட்சி பார்த்து ஒப்புக்கொள்கிறார். 20 பக்கங்கள் அடங்கியது எ.சா.ஆ.2 அந்த தகவல் பக்கம் 16 ல் உள்ளது.

நோயாளிகளின் விவரத்தை Abstract–ஆக கொடுப்பார்கள் என்றால் சரிதான். 20.06.2015 ல் Inpatient 10, Absconding–1, Discharged–4, Balance–7 என்று எழுதி handed over to night duty staff என எழுதியுள்ளது என்றால் அதில் சரியாக தெரியவில்லை அதனுடைய வடிவத்தில்தான் உள்ளது.

Night duty என்பது இரவு 07.00 மணிக்கு ஆரம்பமாகும். அப்படியானால் எ.த.சா.ஆ.2 ன்படி இரவு 07.00 மணிக்கு மேல் Absconding patient–1 என்றால் சரிதான். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பட்டியல் ஆவணம் 51 லிருந்து பிரித்தெடுக்கப்பட்ட Investigations, Nurse report chart and Drugs Chart ஆகிய இரண்டு

தாள்களுடன் கூடிய ஒரு வெள்ளை தாளில் 22.06.2015 தேதியிட்ட AR copy & Reference slip பெற்றுக்கொண்டேன் என கையெழுத்திடப்பட்ட 3 தாள்கள் சாட்சியிடம் காட்டி வினவியபோது அது ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தரப்பட்ட ஆவணம் என்பதால் எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அ.சா.ஆ.47 விபத்து பதிவேட்டில் நோயாளிக்கு மூன்று காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டிருந்தேன். 22.06.2015 நான் மீண்டும் டியூட்டியில் வந்த பிறகு Absconding Patient பற்றி கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்துக்கொண்டேன். நான் அதை நோயாளியின் மருத்துவ குறிப்பு ஆவணத்தை பார்த்து தெரிந்துக்கொண்டேன்.

நான் 22.06.2015 தேதி பணிக்கு திரும்பியபோது 20.06.2015 ல் Male Ward ல் இருந்தார் என்பது குறித்து யாரிடனாவது கேட்டு உறுதி செய்தேனா என்றால் இல்லை. மருத்துவ குறிப்பை பார்த்து தெரிந்துக்கொண்டேன். மேற்படி மருத்துவர் ஸ்ரீநாத் Male Ward ல் நோயாளி இருந்தார் என்று எழுதியதை யாரிடனாவது கேட்டு உறுதி செய்து கொண்டேனா என்றால் இல்லை.

நோயாளியை Male Ward–கு அனுப்புவதற்கு ஒரு slip எழுதி கொடுத்து அனுப்புவார்கள் என்றால் சரிதான். Male Ward–ல் நோயாளி இல்லை என்றும் வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. டாக்டர் ஸ்ரீநாத் நோயாளி Male Ward தான் இருந்தார் என்பதற்காக staff nurse மற்றும் ward boy–யிடம் கேட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை.

22.06.2015 அன்று நாள் பணிக்கு திரும்பியபோது நோயாளி இருந்தாரா இல்லையா என்பதை தெரிந்துக்கொள்ளாமல் நான் இரத்த அழுத்தம் பதிவு செய்தது வழக்கிற்காக பின்னிட்டு நான் பொய்யாக பதிவு செய்தது என்றால் சரியல்ல.

விபத்து பதிவேட்டில் நோயாளிக்கு 3 காயங்கள் உள்ளது என்றும் நீதித்துறை நடுவர் விசாரணையில் கடந்த 16.08.2016 அன்று பல்வேறு காயங்கள் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் விபத்து பதிந்ததற்கு முன்னர் நோயாளிக்கு பல்வேறு காயங்கள் இருந்தது என்பதை வேறொரு ஆவணங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

ஒரு நோயாளிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காயங்கள் இருந்தால் அதை பல்வேறு காயங்கள் என்றுதான் குறிப்பிடுவோம். அ.சா.ஆ.48 ல் முதல் பக்கத்தில் உள்ள குறிப்புகளை நான் எழுதவில்லை என்னுடைய Staff Nurse எழுதியுள்ளார். அந்த பக்கத்தில் Assault ( Multiple Injury) என்று வேறொரு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் Multiple Injury என்பதை நான்தான் எழுதினேன்.

Multiple Injury என்பதை அன்றைய தேதியில் எழுதவில்லை என்றும் பின்னிட்டு வழக்கிறகாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த பக்கத்தில் சிவப்பு மையினால் எழுதி அடித்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. inpatient case sheet ல் முதல் பக்கத்தில் final diagnosis என்ற column ல் improved, referred என்பதை சிவப்பு மையால் சுழிக்கப்பட்டுள்ளது என்றால் referred மட்டும்தான் சுழிக்கப்பட்டுள்ளது.

Referred and Abscond மட்டும் சிவப்பு மையால் சுழிக்கப்பட்டுள்ளது. Abscond என்ற வார்த்தையை staff nurse அடிக்காமல் விட்டுள்ளார்கள். Final diagnosis என்ற விளக்கத்திற்கு வலது பக்கத்தில் 11.00 A.M. 20.06.2015 என்பதனை சாய்வு கோடிட்டு அடித்துவிட்டு 22.06.2015 என்று Absconded என்ற column–கு நேராக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வலது புறத்தில் ஏற்கனவே சொன்ன மாதிரி அடித்தல் செய்ததற்கான மேலொப்பம் எதுவும் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

எத்தனை காயங்கள் என்று எழுதியிருக்கிறேன் என்று சொன்னால் As per AR என்ற எழுதியிருக்கிறேன். 16.08.2016 அன்று நீதித்துறை நடுவர் எண். 5 (பொறுப்பு), வேலூர் அவர்கள் முன்னிலையில் சிபிசிஐடி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பல்வேறு காயங்கள் உடல் முழுவதும் இருந்ததாக பொய் சாட்சி சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண்.5 (பொறுப்பு), வேலூர் முன்பு Multiple Contusion என்று சொன்னதை வேறு எந்த ஆவணங்களிளாவது பதிவு செய்துள்ளேனா என்றால் AR–ல் Multiple Contusion என்று குறிப்பிடவில்லை. AR–ல் இல்லாததததையும், பிற ஆவணங்களில் இல்லாததததையும் நீதித்துறை நடுவர் எண்.5 (பொறுப்பு), வேலூர் முன்பு இருப்பதாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண் 5 (பொறுப்பு), வேலூர் முன்பு அழைப்பாணையின் பெயரில் ஆஜர் ஆகினேனா என்றால் அழைப்பாணையின் பெயரில் ஆஜர் ஆகினேன். நீதித்துறை நடுவர் எண்.5 (பொறுப்பு), வேலூர் எனக்கு அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நீதித்துறை நடுவர் எண்.5 (பொறுப்பு), வேலூர் அவர்களிடம் எந்தெந்த ஆவணங்களை கொடுத்தேன் என்றால் எந்தவித ஆவணங்களையும் நீதித்துறை நடுவர் எண்.5 (பொறுப்பு), வேலூர் அவர்களிடம் விசாரணையின்போது சமர்ப்பிக்கவில்லை.

என்னால் தரப்பட்ட மருத்துவ அறிக்கையில் எந்த தேதியில் அந்த மருத்துவ அறிக்கை தட்டச்சு செய்யப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது என்ற விவரம் அந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். IP No.4913/MLC ல் வெற்று தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கி சென்று போலீசாரே பூர்த்தி செய்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மருத்துவ அறிக்கை சிபிசிஐடியால் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் அந்த ஆவணத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்பதற்கான எந்த குறிப்பும் அந்த மருத்துவ அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் AR ல் குறிப்பிட்டுள்ள காயங்கள் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். AR ல் contusion என்ற வார்த்தை உள்ளதா என்றால் contusion என்ற வார்த்தை இல்லை.

AR ல் உள்ள காயத்தை பற்றிய தகவல்கள் இந்த மருத்துவ அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். contusion and swelling

இரண்டும் வெவ்வேறான அர்த்தத்தை குறிக்கக்கூடிய வார்த்தைகள். Contusion என்றால் இரத்தக்கட்டு swelling என்பது வீக்கம். Contusion என்பது வீக்கத்திற்கு(swelling) காரணமாக இருக்கலாம். மருத்துவ அறிக்கையை பின்னிட்ட காலங்களில் வழக்கிற்காக பொய்யாக போலீசார் தயாரிப்பதற்கு நான் உறுதுணையாக இருந்து நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மருத்துவ அறிக்கையை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தார்கள் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னால் சொல்லப்பட்டு அதை என் உதவியாளர் தயாரித்தார். என் உதவியாளர் தயாரித்ததாக குறிப்பு எதுவும் இல்லை.

19.06.2015 ல் நான் பரிசோதித்தபோது வலது கையில் மட்டுமே வீக்கம் இருந்ததாக தெரிவித்து அதன்பிறகு 22.06.2015 அன்று இடது கை அசைக்க முடியாமல் இருந்ததாகவும் கூறியுள்ளேன். இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வரிசை எண் 51 ஆவணத்தில் பகுதி 1ல் Graphics Chart and Discharge Summary ஆகியவைகளில் அரசு மருத்துவமனை முத்திரை உள்ளதா என்றால் இல்லை. சிபிசிஐடி விசாரணையில் மருத்துவமனையில் உள்ள ஆவணங்கை பொய்யாக தயாரித்து இந்த ஆவணத்தை தயாரித்து இந்த வழக்கை ஜோடித்துள்ளார்கள் என்றும் அதற்கு உறுதுணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

20.06.2015 மற்றும் 21.06.2015 மேற்படி நோயாளிக்கு மருத்துவம் பார்த்ததை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அதனால் நான் அந்த ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க முடியாது என்றால் நேயாளியின் மருத்துவ பதிவேட்டின் அடிப்படையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அ.சா.ஆ.48 மேற்படி இரண்டு தேதிகளில் எந்த மருத்துவர் அந்த தகவலை கொடுத்தார் என்ற அறுதியிட்டு உறுதியாக சொல்ல இயலாது என்றால் சரிதான். 19.06.2015 அன்ற தரப்பட்ட விபத்து பதிவேடு சிபிசிஐடி போலீசார் சொல்லிகொடுத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.35 மணி

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.28 19:11:52 +0530